# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி

**OS.No. 27/2013 .நாள். 07.12.2022**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டடது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ச் கிளர்க் திரு. ராமன் அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| **பெயர்** | **சகுந்தலா** | **வயது** | 60 |
|---|---|---|---|
| **த/பெ. க/பெ.** | **முனியப்பநாயுடு** | **மதம்** | |
| **முகவரி** | **தட்டக்கல்** | **தொழில்** | விவசாயம் |

**<u>பி. சா. 1 ஆஜர். முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கில் 1 ஆம் பிரதிவாதியாவேன். எனது தரப்பில் முதல் விசராணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயாரிக்கப்பட்டதாகும். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1) 26.03.1967 ஆம் தேதியிட்ட கிரய பத்திர அசல். பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 14.09.2013 ஆம் தேதியிட்ட வில்லங்க சான்று நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 23.04.2013 ஆம் தேதியிட்ட வில்லங்க சான்றின் நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 29.11.2007 ஆம் தேதியிட்ட கணிணி சிட்டா பட்டா எண் 440 க்கான நகல் பி.சா.வா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 16.07.2007 ல் பட்டா மாறுதல் கோரி வாதி அளித்துள்ள மனுவின் நகல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) சின்னசாமி தாக்கல் செய்த கேவியட் மனுவின் சார்வு நகல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) 25.07.2012 ஆம் தேதி தண்டபானி தாக்கல் செய்த கேவியட் மனுவின் சார்பு நகல் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) 04.02.2013 ஆம் தேதி 1 ஆம் பிரதிவாதி நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் அளித்த மனுவின் நகல் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9) 14.12.2018 ஆம் தேதி நீதிமன்றத்திலிருந்து 1 ஆம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட நீதிமன்ற சான்று நகல் பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10) 04.04.2013 ஆம் தேதியிட்ட இவ்வழக்கின் வழக்குரையின் சார்வு நகல் பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11) 27.11.2015 ஆம் தேதியிட்ட இவ்வழக்கில் இடைநிலை மனு எண். 310/2015 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மற்றும் உத்தரவு ஆணையின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12) 22.05.2014 ஆம் தேதியிட்ட வில்லங்க சான்று பி.வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிராதுப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.